**பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளிகளில் பயின்று அதிக மதிப்பெண் பெறும் பிற்ப்படுத்தப்டோர்,மிகவும் பிற்ப்படுத்தப்பட்டோர் ,சீர்மரபினர் மாணவ,மாணவியரை தமிழகத்தின் சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக்கல்வி பயில்வதற்கான உதவித்திட்டம் - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

திருவாரூர் மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட ,சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த 3 மாணவர்கள் ,3 மாணவியர் மற்றும் மிகப்பிற்ப்படுத்தப்பட்ட ,சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் 2 மாணவியர்கள் ஆக மொத்தம் 10 மாணவ மாணவியரைத் தேர்வு செய்து அவர்கள் விரும்புகின்ற தமிழகத்திலுள்ள திலைசிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்து மேல்நிலைக்கல்வி பெற ஏதுவாக அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் உதவிபெற விரும்பும் மாணவ ,மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் 1 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.இத்திட்டத்தின் கீழ் ஒரு மாணவருக்கு உயர்நதபட்சமாக ஆண்டொன்றிற்கு ரூ.28 ஆயிரம் மிகாமல் இரண்டாண்டுகளுக்கு ரூ.56 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுகிறது.நிதியுதவியின் முழு விபரங்கள் கல்விக் கட்டணமாக ரூ.8 ஆயிரமும்,பராமரிப்புக் கட்டணமாக ரூ.3 ஆயிரத்து 650-ம்,விடுதி கட்டணமாக ரூ.15 ஆயிரமும் (விடுதி சேர்ந்து படிப்பவர்களுக்கு மட்டும்)சிறப்பு பயிற்சிக் கட்டணம் ரூ.1500 – ம் ஆகமொத்தம் ரூ.28 ஆயிரத்து 150 வழங்கப்படுகிறது.தகுதியுடைய மாணவ,மாணவியர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்ப்படுத்தப்பட்டோர் நல அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**